# விவசாய தொழில்நுட்பத் தகவல்

NAICC

**விவசாய தொழில்நுட்ப தகவல்களை விவசாயிகளிற்கு மிக விரைவாக வழங்கும் ஒரு கையேடு.**

**விவசாயத் திணைக்களத்தின் தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையத்தின் வெளியீடு**

**தொழிநுட்ப பிரசுரம் இலக்கம் 07 - 2022 ஜனவரி**




# துவரம் பருப்பு ஆய்வில் தெளிவான ஓர் முன்னேற்றம்

நெல் மற்றும் கோதுமைக்கு அடுத்தபடியாக இலங்கையில் உணவுக் கலாச்சாரத்தில் அதிகளவு பயன்படுத்தும் பயிர் எதுவென ஆராய்ந்த போது சிவப்பு பருப்பிற்கு கிடைப்பது முன் இடமாகும் முன்னால் குறிப்பிட்ட பயிர்கள் இரண்டும் பிரதான உணவாகும். எனினும் சிவப்பு பருப்பு பிரதான உணவு அல்ல .அதனை அதிகளவு உண்பது அந்தளவு உடலுக்கு நல்லதல்ல என சர்வதேச மட்டத்தில் வெளியிடப்படும் வைத்திய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது .அந்த தகவலில் குறிப்பிடப்படுவதானது சிவப்பு பருப்பின் அதிக நுகர்வு சிறுநீரகத்திற்கு மேலதிக சோர்வை கொடுப்பதுடன் சிறுநீரக கல் உடையவர்களுக்கு இவற்றை உண்ணக் கூடாது என்பதாகும். உணவுச்சமிபாட்டுத் தொகுதியில் சிக்கல்களை ஏற்படுத்துவதுடன் அதனுள் வாயு உற்பத்தியாகும் அசாதாரண நிலை ஏற்படும் என குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறாயினும் நாம் தற்போது வரை எமது நாட்டில் பயிரிடமுடியாத இதனை உணவுடன் சேர்ப்பதற்கு எவ்வாறு பழக்கப்பட்டுள்ளோம் என்றால் பேரழிவு ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் கொடுக்கப்படும் நிவாரண பைகளினுள்ளும் சிவப்பு பருப்பானது இல்லாமல் இருக்காது. மக்களுக்கு ஆறுதல் வழங்க நுகர்வு பொருட்களில் விலை குறைக்கும் போது சிவப்பு பருப்பு பற்றி அதிகாரிக்களுக்கு மறப்பது இல்லை. 2018 ம் ஆண்டு 162,050 தொன் பருப்பு எமது நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது அதில் 90 % பிரித்தெடுக்ககப்படாத பருப்பாகும். உலகில் பெரிய விதை பிரித்தெடுக்கும் தொழிற்சாலை காணப்படுவது இந்நாட்டிலாகும் இதனால் 10 % பிரித்தெடுக்கப்படாத பருப்பு கொண்டுவரபட தேவையில்லை. செலுத்தப்பட்ட மொத்த இறக்குமதிச் செலவு ரூபாய் மில்லியன் 12710ஆனது கோடி 1271 ஆகும்.



இறக்குமதி சிவப்பு பருப்புக்கு பதிலாக உள்நாட்டில் பயிரக்கூடிய மாற்றுபயிர்களின் முக்கியத்துவம் பற்றி விவசாய திணைக்களம் கவனம் செலுத்தியது பல வருடங்களுக்கு முன்பு என்பதை குறிப்பிட்டிருந்தோம். “டோர் டாள்” Toor Dal எனப்படும் உலர் வலயத்தில் பயிரிடக்கூடிய பயிரான துவரம் பருப்பு என தமிழில் குறிப்பிட்டு எமது நாட்டில் அறிமுகப்படுத்தினாலும் இதற்காக உலகில் பயன்படுத்தப்படும் பெயர் “பீஜன் பீ” (Pigeon pea) என்பதாகும். இரண்டு

சந்தர்ப்பங்களில் இந் நாட்டில் துவரம் பருப்பு அறிமுகப்படுத்த மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்தமை பற்றி சென்ற வருடம் நாம் வெளியிட்ட தொழிநுட்பதகவல் பத்திரிகை இல 33 இல் குறிப்பிட்டுள்ளோம். அதற்கு மேலதிகமாக அரலகங்வில ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகளின் ஆர்வம் காரணமாக மூன்றாவது முயற்சி மேற்கொள்ளப்படுவதாக இங்கு குறிப்பிடப்படடுள்ளது.

**“202/21 பெரும் போகத்திற்காக ஆராய்ச்சி செய்யும் இடத்தில் துவரம் பருப்பு 5 ஏக்கர் பயிரிடப்பட்டது . நூறிற்கு மேற்பட்ட பயிர் மாதிரியில் இருந்து 26 தெரிவு செய்யப்பட்டு தொடங்கப்பட்ட வேலைத்திட்டமானது தற்பொழுது 12 பயிர் தெரிவிற்கு குறைக்கப்பட்டுள்ளது. இந்த பயிர்தெரிவு 12 யைப் பாவித்து சென்ற பெரும் போகத்தில் (2021/21) 25 ஏக்கர் பயிரிடப்பட்டது. அந்த வர்கம் இயந்திர அறுவடைக்கு ஏற்றவை . அதே போல் நல்ல குணமுடையவை. தற்போது அவற்றில் பூ பூத்துள்ளது. பயிர் நடுகை நோய் மற்றும் பீடைக்கட்டுப்பாடு மட்டுமல்ல , இயந்திர அறுவடை, பிரித்தெடுத்தல், உணவாக தயார்படுத்தல் போன்ற எல்லா செயற்பாடுகளையும் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் அறிமுகப்படுத்த இம் முறை தயார்நிலையிலுள்ளோம் துவரம்பருப்பு அறிமுகம் தோல்வியடைய இந்த எந்த காரணமும் காரணமாகலாம். முன் நடந்ததும் அதுவாகும்”.**

இவ்வாறு கருத்து வெளியிட்டது அரலகங்வில விவசாய ஆராச்சி நிலைய பிரதான விவசாய விஞ்ஞானி W.A. விஜிதவர்ன ஆவார். பயிர்செய்கைக்காக இம்முறை தெரிவு செய்யப்பட்ட அனைத்து வர்கங்களும் இயந்திர அறுவடைக்கு ஏற்றவை. இவை குட்டையானவை. அறுவது வருட காலத்திற்கு முன்பு முதல் தடவையாக பயிரினை அறிமுகப்படுத்திய போது பெரிய தடையாக அமைந்தது மெருகா டெஸ்டியுலாலிஸ் (Maruca testulalis) எனும் அந்தின் குடம்பி பருவமான காய் துளைக்கும் புழுவின் சேதத்தை தற்போது வரை குறிப்பிடத்தக்க அளவில் காண முடியவில்லை என அவர் குறிப்பிட்டார். சென்ற காலமானது நூறு வருடங்களில் பாதியிலும் அதிகம் . அந்த பீடை சேதத்தை கட்டுப்படுத்த இயற்கை எதிரிகள் தாமாக எமது நாட்டில் தோன்றி இருக்க முடியும் . இல்லையெனில் விவசாயிகள் மத்தியில் குறித்தளவு துவரை பருப்பு மீதாகியிருப்பது அவை மத்தியில் தாமாக தோன்றிய எதிர்ப்பு தன்மையாகவும் இருக்க முடியும்.



ஆய்வாளர் மூலம் இயந்திர பிரித்தெடுப்பு மூலம் விதை வேறுபடுத்தல் மற்றும் இலகுவாக தயாரிக்கும் முறை பற்றியும் கண்டறியப்பட்டுள்ளது

**“சமைத்தல் தரம் பற்றி பரிசோதிக்க உணவு தொழிநுட்ப பிரிவிற்கு 11 வர்கங்களின் மாதிரி கிடைக்கப்பெற்றது பிரித்தெடுக்கப்பட்ட பருப்பு நிலையில்தான் கிடைத்தது.சாதாரணமாக ஊறவைத்தல் முழுமையடைவது என குறிப்பிடுவது நிறையானது 70 % அதிகரிப்பாகும் . இரண்டு வர்கங்களில் 20 நிமிடங்களில் அந் நிலைக்கு வந்தது. எல்லா வர்கங்களும் அரை மணித்தியாலத்தில் ஊறின. 10-15 நிமிடங்களில் நன்கு வெந்தன.”**



இவ்வாறு குறிப்பிடுவது அகுணுகொலபெலஸ்ஸ ஆராச்சி நிலையத்தின் உணவு தொழிநுட்ப பிரிவின் உதவி விவசாய பணிப்பாளர் இசானி ரத்நாயக்க லியனகே ஆவார். தயாரிப்பின் போது சரக்கு பாவிக்காமைக்கான காரணம் சுவை பரிசோதிக்கும் குழுவின் அறிக்கையை பெறவாகும். வெளித்தோற்றம் சுவை அமைப்பு மற்றும் மணம் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டு இறுதி மதிப்பீட்டில் விளைவாக குறிபிடத்தக்க மட்ட வேறுபாடு இன்றிய 11 வர்கத்திற்கு உயர் அனுமதி கிடைத்தது..

உயர் வலயத்தில் பயிரிடப்படாத நிலங்கள் காணப்படுகின்றன. மழை நீரை பயன்படுத்தி பெரும் போகத்தில் பயிரிட்டாலே ஒழிய இந் நிலங்களில் வேறு பிரயோசனமில்லை. ஆழமான வேர்த் தொகுதியுடைய இவ் வகையான நிலத்தில் நிலைத்திருக்க கூடிய துவரம் பருப்பிற்கு செல்ல நல்ல காலம் தோன்றியுள்ளது. எவ்வகையான உரத்தினை இட்டு வளர்க்கப்பட்டுள்ளது, விதையைப் பாதுகாக்க என்ன பொருள் சேர்க்கப்பட்டுள்ளது என்பது எதுவும் தெரியத சிவப்பு பருப்பை கைவிட்டு இதற்கு பழக்கப்பட ஆரம்பத்தில் கடினமாயினும் இது காலத்தின் அவசியமாகும். எமது நாட்டு உற்பத்தியான இதில் கிடைக்கும் பாதுகாப்பானது எல்லா பாகங்களிலும் பெறுமதி வாய்ந்தது .தகவல்களை அடிப்படையாக கொண்டு பொருத்தமான வர்கத்தினை தெரிவு செய்ய பயிர்செய்கைக்கு தேவையான விதைகளை வழங்குவதற்கு விவசாய விஞ்ஞானிகள் உள்ளனர். உணவு மேசைக்கு துவரை பருப்பை கொண்டு வருவதற்கு பொறுப்புடையோர் செயற்படுத்தவோ அல்லது செயற்படுத்த தூண்டுவதோ அதிகாரிகள் கொண்டுள்ள பொறுப்பாகும்.




**பிரதியாக்கம்** :- சனத் எம். பண்டார, உதவி விவசாயப் பணிப்பாளர், தேசிய விவசாயத் தகவல், தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை

**தொழில்நுட்ப உதவி** :- டபிள்யு.ஏ.விஜிதவர்ண பிரதி பணிப்பாளர் (ஆராய்ச்சி) விவசாய ஆராய்ச்சி நிலையம், அரலனங்வில

இஷானி ரத்னாயக லியனகே - விவசாய உதவி பணிப்பாளர்,தானிய அவரை எண்ணெய்ப் பயிர்ச் செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் அங்குனுகொலபெலச

**தமிழாக்கம்:-**திவ்யகுமார் புவித்திரா **கணணி வடிவமைப்பு:-** புவனேந்திரன் சஹிதரக்ஷனா

மேற்பார்வை மற்றும் ஆலோசனை : டப்ளிவ்.எல். ஹிரான் பீரிஸ் (பணிப்பாளர்- தகவல். தொடர்பாடல்)

: ஐ.எஸ்.எம். ஹலீம்தீன் (பிரதி விவசாயப் பணிப்பாளர்)